செய்தி வெளியீடு எண்: 626 நாள்:23.09.2019

## செய்தி வெளியீடு

தீபாவளி திருநாளன்று பட்டாசுகள் விற்பனை செய்திட பண்டிகைக்கு 30 நாட்களுக்கு முன் தற்காலிக உரிமம் வழங்கிட விண்ணப்பங்களை இணைய வழியாக சமர்ப்பிக்க அரசாணை (நிலை) எண்.309 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை வ.நி 3(2) துறை, நாள் 27.08.2018 வெளியிடப்பட்டு வரும் 2019 தீபாவளிக்கு பட்டாசு விற்பனை செய்திட விண்ணப்பங்கள் இணையவழி மூலமாக 31.08.2019 வரை பெறப்பட்டது.

தற்போது பட்டாசு விற்பனை செய்திட விண்ணப்பிக்க கால அவகாசம் முடிந்துவிட்டநிலையில், மாவட்டங்களில் இணையவழி மூலம் விண்ணப்பிக்கும் இப்புதிய நடைமுறை தங்களுக்கு மேற்கண்ட காலவரையரைக்குள் தெரிய வரவில்லை என்றும், இணைவழி மூலம் விண்ணப்பிக்க கால அவகாசத்தை நீட்டித்து வழங்க வணிகர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, இணைய வழியாக விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நடைமுறை சரிவர அறிய இயலாத காரணத்தினால் தற்காலிக உரிமத்தை பெற விரும்பும் வணிகர்கள்/ விற்பனையாளர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களின் நலன் கருதி இணையவழியாக விண்ணப்பம் செய்ய 27.09.2019 வரை கால நீடிப்பு செய்யப்படுகிறது. இக்கால நீடிப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு வணிகர்கள் / விற்பனையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**